நாகப்பட்டினத்திலுள்ள தொழில் பயிற்சிப் பள்ளி

*905 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்காவில் உள்ள இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட் (I.T.I.) எந்த ஆண்டில் அமைக்கப் பட்டது?

(இ) 1970-71, 1971-72 ஆண்டுகளில் அதில் பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 1958-ஆம் ஆண்டில்.

(இ) முறையே 363, 376.

திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த நாகப்பட்டினத்தில் அமைத்திருக்கும் இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டியூட் போன்ற தொழில் பயிற்சிக் கூடங்களை மிகவும் பின்தங்கிய நன்னிலம் தாலுக்கா போன்ற தாலுக்காக்களில் அமைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதிருக்கும் இந்த ஐ.டி.ஐ. யிலேயே ஏராளமாகப் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 906 மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி தள்ளிவைக்கப்படுகிறது.

காணுங்காட்டைச் சார்ந்த நிலங்கள்

*907 வினா.—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், காணுங்காடு, என்ற காடு 3,500 ஏக்கர் அளவுள்ள நிலத்தில் அரசு பண்ணை ஏற்படுத்தலாம் என்று மாவட்ட ஆட்சியாளர் அரசுக்கு தெரிவித்துள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

1972 ஏப்ரல் 6]

திரு. ந. நாச்சியப்பன்: பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும், மாவட்ட வனத்துறை அலுவலரும் இந்தக் காட்டுப் பகுதியைச் சுற்றிப் பார்த்து, வேளாண்மைப் பண்ணை வைக்க அரசுக்கு சிபாரிசு செய்து அனுப்புவதாகக் கூறிச் சென்றார்கள். அப்படி அனுப்பாமல் இருந்தால் அந்தக் காடு நல்ல நீர்வளமும் நிலவளமும் கொண்டிருப்பதாலும், அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருப்பதாலும் அந்தப் பகுதியிலுள்ள விவசாயக் கூலிகளுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலே இந்தப் பகுதியில் அரசு விவசாயப் பண்ணை ஏற்படுத்துவதற்கு மீண்டும் புனராலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரவர்களால் கொடுக்கப்பட்ட அந்தக் கோரிக்கையை வன இலாக்கா அது பற்றிய திட்டம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். வருகின்ற ஆண்டிலே வன இலாக்கா அதிலே காட்டுப் பயிரிட ஏற்பாடு செய்ய ஓராண்டுத் திட்டத்தைத் துவக்கியிருக்கிறார்கள்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஜீப் கார்கள்

*908 வினா.—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு I.A.D.P மூலம் ஜீப் கார்கள் வழங்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி. ஆம்.

திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் கோடைக் காலங்களில் சாகுபடி செய்யலாம் தஞ்சை மாவட்டத்தில் என்று அண்மையில் அறிவித்திருக்கிறார்கள். எனவே அதற்கேற்ப ஜீப் கார்கள் அதிகமாக அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, கோடை காலத்திற்கு என்று ஜீப் தேவை இல்லை. அந்த ஜீப் ஆண்டுபூராவும் ஓடிக்கொண்டிருக்கும் ஜீப்தான். ஆகவே கோடை காலத்திற்கு என்றும், இரண்டாம் போகத்திற்கு என்றும், முதல் போகத்திற்கு என்றும் விகிதாச்சாரம் தேவையில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த ஜீப்புகளை யார் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவரா அல்லது அக்ரிகல்சர் எக்ஸ்டன்ஷன் ஆபீசர் பயன்படுத்துகிறாரா? யார் பயன்படுத்துகிறார்கள்?